**வரையறுத்த கொழும்பு கொமர்ஷியல் பசளைக் கம்பனி - 2019/ 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த கொழும்பு கொமா்ஷியல் பசளைக் கம்பனியின் 2020 மாா்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வரையறுத்த கொழும்பு கொமா்ஷியல் பசளைக் கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களைஇலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனிஉள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின்செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின்நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் இருப்பு பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட்டு கிரயம் அல்லது தேறிய நிகரப் பெறுமதி ஆகிய இரண்டில் குறைவான பெறுமதிக்கு மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் குனுப்பிட்டிய | ஒரே உர வகை எனினும் பயன்படுத்தப்படும் பயிரின் பிரகாரம் அவற்றின் தேறக்கூடிய பெறுமதி மாற்றமடையும். உர செயலகத்தினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய பயிர்கள் 50Kg | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| களஞ்சிய தொகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த சில உரங்களின் இருப்பானது பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்த காரணத்தால் இறுதி இருப்பின் பெறுமதி ஐந்தொகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ரூபா 278,323,718 ஆன இரசாயன உரத்தின் இருப்பின் பெறுமதி தொடர்பில் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பையொன்றுக்கு ரூபா 1,000 தொகையும் நெல் உரத்திற்காக 50Kg பையொன்றுக்கு ரூபா 500 விலைக்கும் எம்மால் விற்பனை செய்ய வேண்டியுள்ளது. அதன் பிரகாரம் வயல்களுக்கு பயன்படுத்தப்படும் உரத்தின் தேறிய பெறுமதியை ஏனைய பயிர்களுக்காக பயன்படுத்தப்படும் அந்த இரசாயன உரத்தின் வகையில் தேறிய பெறுமதி மாறுபடும். பொதுத் திறைசேரியினால் எமது நிறுவனத்திற்கு மானியங்கள் வழங்கப்படுவது அந்த மாற்றத்தினை அடிப்படையாக கொண்டேயாகும். அதன் பிரகாரம் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் எம்மால் 02 உருப்படிகளாக கருதி இருப்பின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கம்பனியால் நேரடியாக கொள்வனவு செய்யப்படும் உரத்தின் வகைகளை கம்பனியினுள் விநியோகித்தல், கடத்தல், சிறு பக்கட்டுக்களில் அடைத்தல், மீள பொதி செய்தல், ஒவ்வொரு வகைகளுக்கிடையே மாற்றுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கு உட்படுகின்றது. கணக்காண்டினுள் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். மேலதிக விடயங்களை ஆராய்ந்து எதிர்வரும் கணக்காய்வின் போது உரிய முறையில் தகவல் சமர்ப்பிக்கின்றேன். | விற்பனை கிரயத்தனை கணிப்பிடும் போது இருப்புப் பற்றாக்குறையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்ட நேரடியான உரம் தொடர்பில் மேற்படி பல்வேறு நடைமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டமைக்கு தொகைகள் உள்ளடக்கப்பட்ட இறுதி இருப்பின் பெறுமதி கணிப்பிடப்பட்டுள்ள போதிலும் இருப்புக் கணிப்பீடின் போது இனங்காணப்பட்டுள்ள உரம் 41.891 மெற்றிக் தொன் இருப்புப் பற்றாக்குறையான ரூபா 1,182 மில்லியனான விற்பனைக் கிரயத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிராத காரணத்தால் மீளாய்வாண்டின் இலாபம் அண்ணளவாக அந்த பற்றாக்குறையின் சராசரி கிரயமான ரூபா 2,094,550 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சட்ட ரீதியாக சுவீகரிக்கப்படாத அலுவலகத்தின் கம்பனியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியை ரூபா 90,000,000 இற்கு மதிப்பிட்டு நடைமுறையல்லாத சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கிய காரணத்தால் நடைமுறையல்லாத சொத்துக்கள் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தன. | கம்பனி 1997 இல் மீண்டும் அரசிற்கு சுவீகரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நிறுவனத்தின் ஆரம்ப ஐந்தொகையை தயாரிப்பதற்கு பொதுத் திறைசேரியின் பிரதிநிதிகளை உள்ளடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் போது அந்த குழுவினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை தீர்மானிக்கும் போது கம்பனி அமைந்துள்ள காணி ரூபா 90,000,000 தொகைக்கு மதிப்பிடப்பட்டு ஐந்தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த காணி முன்னர் கம்பனிக்கு சொந்தமாக காணப்பட்ட போதிலும் மீண்டும் அரசிற்கு சுவீகரித்த சந்தர்ப்பத்தில் | காணியின் சட்ட ரீதியான உரித்து கம்பனிக்கு பெற்றுக் கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அதன் உரித்தினை களணி பிரதேச சபைக்கும் அதன் பின்னர் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காணியின் உரித்து கம்பனிக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தற்போது கிடைத்துள்ளது. | |

### 1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| திறைசேரியின் அங்கீகாரமின்றி கம்பனியின் ஊழியர்களினால் சேமிக்கப்பட்ட குறுங்கால மற்றும் மருத்துவ விடுமுறைகளுக்காக ரூபா 4,926,394 கூட்டுப் பெறுமதியான விடுப்பு படிகள் மற்றும் கம்பனியின் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்காக ரூபா 847,427 கூட்டுப் பெறுமதியான நிறைவேற்று படியினை செலுத்தும் படி செலுத்தப்பட்டுள்ளது. | வருகைக்கான ஊக்குவிப்பு படியாக கம்பனியின் நிதியத்தினை பயன்படுத்தி கம்பனியின் நிரந்தர ஊழியர்களுக்கு நீண்டகாலத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்படாத மருத்துவ விடுமுறைகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டுள்ளமையை விருப்பத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | இந்த கொடுப்பனவுகள் சட்டரீதியற்ற கொடுப்பனவுகளாக கருதி செயற்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் உர விநியோகத்தர்களுக்காக செலுத்த வேண்டிய நாளில் பொதுத் திறைசேரியிலிருந்து கட்டுநிதி கிடைக்காத காரணத்தினால் வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட குறுங்கால கடன் தொகையின் மூலம் கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. பின்னர் குறுங்கால கடன் தொகை | இந்த விடயங்கள் தொடர்பில் பொதுத் திறைசேரி மற்றும் தொடர்ச்சியாக வாய்மூலமாகவும் எழுத்து மூலமாகவும் விடயங்களை கலந்துரையாடியவாறு உள்ளதுடன் இந்தப் பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | பொதுத்திறைசேரி யிலிருந்து பொறுப்புக்களை சான்றுறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொதுத் திறைசேரியின் பொருட்டின் கீழ் நீண்டகால கடனாக மாற்றப்பட்டிருந்த போதிலும் குறுங்கால கடனுக்காக வங்கிகளுக்கு செலுத்தப்பட்ட கடன் வட்டியை அறவிடுதல் தொடர்பில் பொதுத் திறைசேரியுடன் இணக்கப்பாடு எட்டப்படாமை மற்றும் குறுங்கால வட்டி நீண்டகால கடன் தொகைக்கு உள்ளடக்கப்பட்டிராமை ஆகிய காரணங்களால் திறைசேரியின் பொறுப்புக்கள் உறுதிப்படுத்தப்படாத ரூபா 158,498,393 ஆன குறுங்கால கடன் வட்டி கடன் வட்டி பொதுத் திறைசேரியிலிருந்து பெற வேண்டிய மீதியொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நடைமுறை சொத்தொன்றாக கடந்த வருடத்திலிருந்து முன் கொண்டுவரப்படும் லங்கா உரக் கம்பனியிலிருந்து பெற வேண்டிய ரூபா 4,993,147 ஆன வியாபார கடன் பட்டோர் மீதி மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | லங்கா உரக் கம்பனியிலிருந்து பெற வேண்டிய வியாபார கடன் பட்டோர் மீதி 2007 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் மீதியாக காணப்படுவதுடன் இது தொடர்பில் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் கலந்துரையாடலுக்கு உள்ளாக்கப்பட்டு மேற்படி மீதி எமது கம்பனிக்கு செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக விருப்பத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இது தொடர்பில் லங்கா உரக் கம்பனிக்கு பல சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் எதிர்காலத்தில் இது தொடர்பில் அமைச்சுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றேன். | கடன் பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2014/2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறை சொத்தொன்றாக முன் கொண்டுவரப்படும் ரூபா 5,047,893 ஆன நானாவித கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கும் கம்பனி தவறியிருந்தது. | இந்த மீதியும் 2006 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் மீதியாவதுடன் மானிய உர நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது ஏற்பட்ட நிலுவை மீதியாகும். அந்த மீதிகள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தியிருந்த போதிலும் அதற்கு எதுவித பதிலையும் தெரிவித்திருக்காமையால் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதுடன் தற்போது சட்டரீதியான நடவடிக்கை எடுத்துள்ள கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வோரும் இந்த மீதியினுள் காணப்படுகின்றனர். | நானாவித கடன்பட்டோர் மீதியை சரியாக இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கடந்த வருடங்களில் அட்டுறு செலவினமாக கணக்கு வைக்கப்பட்ட ரூபா 3,600,816 கூட்டுப்பெறுமதியுடைய செலவினங்கள் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் ரூபா 728,003.19 தொகைக்கான பேரேட்டு இலக்கம் J/MAR/AQ-உப(07) இலக்கம் மூலம் திருத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டது. எனினும், பின்வரும் நிறுவனங்களுக்காக எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்வதற்கு உள்ளமையை தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>**Link Interiors Pvt Ltd** ரூபா **338,989.28**<br>**Science Land Information Technology** ரூபா **275,000.00**<br>**Architrend Consultant** ரூபா **2,258,823.53** | செலவினங்களை சரியாக கணக்கு வைத்து உரிய காலப்பகுதியினுள் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம் | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி உரிய முறையில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் 2016 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டின் முதல் 02 காலாண்டுகளுக்காக உள்நாட்டு இறைவரி மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 675,558 ஆன தண்டப்பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | பிராந்திய களஞ்சியங்களில் விற்பனை நிலைமை தொடர்பில் பேணப்படும் பதிவேடுகள் தலைமை அலுவலகத்திற்கு கிடைப்பதில் நிலவிய தாமதங்களின் காரணமாக அதற்கு வரி செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டமையால் இந்த தண்டப்பணத்தை செலுத்த நேர்ந்துள்ளது. இந்த குறைப்பாட்டினை தவிர்ப்பதற்கு பிராந்திய களஞ்சியங்களிடமிருந்து பதிவேடுகளை ஒரு மாதத்திற்கு இரு தடவைகள் பெற்றுக் கொள்வதற்கு பகிர்ந்தளிக்கும் சேவையின் உதவி (Courier Service) பெற்றுக் கொள்ளப்படவுள்ளதுடன் இதுவரையிலும் உரிய முறையில் தகவல்கள் தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கின்றன. அதனால் எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினையை ஏற்படாதவாறு உரிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளமையை விருப்பத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | உரிய அதிகாரச் சட்டத்தின பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பொது | கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் | 2020 மார்ச் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட கொவிட் தொற்றுநோய் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/12 இணைந்து வெளியிடப்பட்ட பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவையின் 06 அத்தியாயத்தின் 5.1 ஆம் பிரிவு | அனைத்து அரச கம்பனிகளினதும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி போதிலும் நிதியாண்டு நிறைவடைந்து 200 நாட்கள் கடந்த பின்னரே நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நிலைமை காரணமாக நாட்டில் ஏற்பட்ட அவசர நிலைமையுடன் தொடர்ச்சியாக சுமார் 03 மாத காலம் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டமை மற்றும் சுகாதார பரிந்துரைகளின் பிரகாரம் நிறுவனத்தின் பதவியணியினரை ஆகக்குறைந்த எண்ணிக்கையின் கீழ் பேண நேர்ந்தமை ஆகிய காரணங்களினால் இந்த பிரச்சினை உருவாகியுள்ளதாக விருப்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பிரகாரம் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடீ/12 உடன் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவையின் 8.3.3 ஆம் பந்தி | பொது திறைசேரியிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறையொன்றினை பின்பற்றாது மற்றும் தேசிய சம்பளங்கள் மற்றும் படிகள் கொள்கைகளுக்கு இணங்க அனுமதியினை பெறாது மீளாய்வாண்டின் போது ரூபா 15,806,604 கூட்டுப் பெறுமதியான ஊக்குவிப்பு படிகள் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | எமது கம்பனி நீண்ட காலமாக கம்பனியின் நிரந்தர ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை செலுத்துதல் இடம்பெறுவதுடன் உரிய நிதியாண்டினுள்ளும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதுடன் தற்போது இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகளான திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை விருப்பத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | இந்த கொடுப்பனவுகள் சட்டரீதியற்ற படிகளாக கருதி செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 ஆந் திகதிய PED/1/2015 சுற்றறிக்கை மற்றும் 2016 | சுற்றறிக்கையின் மூலம் உள்ளடக்கப்படாத இடைமட்ட முகாமையாளர்கள் | 2015.05.25 ஆந் திகதிய PED 1/2015(i) சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு | இந்த கொடுப்பனவுகள் சட்டரீதியற்ற படிகளாக |

| | | | |
|---|---|---|---|
| ஒக்தோபர் 25 ஆந் திகதிய PED 1/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவு | 05 பேருக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறும் வகையில் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 10,000 படியான பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 600,000 ஆன போக்குவரத்து படிகள் வழங்கப்பட்டிருந்தது. | இடைமட்ட முகாமையாளர்களுக்கு பொது போக்குவரத்து வசதிகளை வழங்க நேருவதில் நடைமுறை சிக்கல்கள் காணப்பட்டமை மற்றும் அதற்கு அதிக கிரயம் ஏற்படுகின்ற காரணத்தால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இலங்கை உரக் கம்பனி பின்பற்றும் நடைமுறையை கருத்தில் கொண்டு இந்த படிகள் வழங்கப்படுகின்றமையை விருப்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | கருதி செயற்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கணக்காண்டினுள் செயற்படு மூலதனத்தை உரிய முறையில் முகாமை செய்யாத காரணத்தால் அதன் விளைவாக ரூபா 78,269,924 வரை வங்கி மேலதிகப்பற்று பயன்படுத்துவதற்கு நேர்ந்திருந்த காரணத்தால் ரூபா 2,109,634 ஆன தவிர்க்க கூடிய வங்கி மேலதிகப் பற்று செலவினம் மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | மானிய உர நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைகள் மாற்றமடைந்ததுடன் விவசாயிகளுக்கு இலவசமாக உரத்தினை வழங்கும் போது எமது கம்பனி கமநல சேவைகள் நிலையத்திற்கு உரத்தினை வழங்குவது கடன் அடிப்படையில் வழங்குவதாகும். அதற்காக பணம் செலுத்தும் போது கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுக்கின்றது. எனினும், உரிய திகதிகளில் இறக்குமதி செய்யப்படும் உர இருப்பினை அகற்ற வேண்டியிருப்பதுடன் அந்த உரங்கள் உரிய காலத்தில் கமநல சேவை மத்திய நிலையங்களுக்கு | கடன் வட்டி செலவினத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பகிர்ந்தளித்தல் வேண்டும். அதற்காக பாரிய செலவினமொன்றை மேற்கொள்ள நேர்கின்றது.

எனினும் உரிய நேரத்தில் பொதுத் திறைசேரி மற்றும் கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பணம் கிடைக்காத காரணத்தால் இந்த பிரச்சினை உருவாகியுள்ளது. இந்த பிரச்சினை பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் உரிய நேரத்தில் உரத்தின் இருப்பினை அகற்றுவதற்கு மற்றும் உரிய நேரத்தில் உர இருப்பினை பகிர்ந்தளிப்பதற்கு தேவையான செயற்படு மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு எமது கம்பனிக்கு சொந்தமான நிலையான வைப்புக்களை பிணையாக வைத்து இந்த வங்கி மேலதிகப் பற்று வசதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் காரணமாக எமது கம்பனிக்கு மேற்கொள்ள நேர்கின்ற வட்டி செலவினத்தை குறைத்துக் கொள்வதற்கு இயலுமானதாக உள்ளமையை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவ்வாறல்லாது விடின், மேற்குறிப்பிடப்பட்ட செயற்படு மூலதன தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு வங்கிக் கடன் வசதியினை பெற்றுக் கொள்ள நேர்வதுடன் அதற்காக அதிக வட்டி வீதத்தினை செலுத்த நேரிடும். அவ்வாறே வங்கி மேலதிகப்பற்றுக்காக வட்டியானது அறவிடப்படுவது எம்மால்

பயன்படுத்தப்படும் வங்கி மேலதிகப் பற்று வசதியின் பெறுமதிக்கு மாத்திரம் என்பதுடன் அதன் வட்டி வீதம் நிலையான வைப்பு வட்டி வீதத்தினை விட இரண்டு சதவீதமே அதிகமாகும். அதாவது 12.75 சதவீதமாவதுடன் நிலையான வைப்புக்களின் வட்டி 10.75 சதவீதமாகும்.

மேலும், இந்த சந்தர்ப்பத்தில் வங்கி கடன் வசதி பெற்றுக் கொள்ளப்பட்டால் அதற்காக சுமார் 14.5 சதவீத வட்டியினை செலுத்துவதற்கு நேரும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறல்லாதுவிடின் எமது கம்பனிக்கு சொந்தமான நிலையான வைப்பினை முதிர்வடைவதற்கு முன்னர் தீர்வையாக்க வேண்டும். அதன் போது முதிர்வடைவதற்கு முன்னர் தீர்வாகியமையால் மேலதிக கிரயமொன்றினை மேற்கொள்ள நேரிடும்.அதாவது 10.75 சதவீதமான வட்டிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையான வைப்புக்களின் வைப்புக்களை முதிர்வடைவதற்கு முன்னர் தீர்வையாக்கினால் 5 சதவீதமதான வட்டி குறைவடையும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேற்குறிப்பிடப்பட்ட நிலைமைகளை கருத்தில் கொண்டு மிகவும் பொருத்தமான நடவடிக்கையாக நிலையான வைப்பினை பிணைக்கு வைத்து வங்கி மேலதிகப்பற்று வசதியினை பெற்று செயற்படு மூலதனத் தேவையினை பூர்த்தி செய்வதன் மூலம் மிகக் குறைந்த வட்டிக்

| | | | |
|---|---|---|---|
| | | கிரயத்துடன் பணியினை மேற்கொள்ள முடியும் என்பது எமது எண்ணமாகும். | |
| (ஆ) | வழங்குனர்களால் கட்டளையை விட ரூபா 6,642,835 இனால் குறைத்துக் உரம் விநியோகிக்கப் பட்டிருந்ததுடன் அந்த அளவினை வழங்குனரிடமிருந்து மீள அறவிட வேண்டியதாக கணக்கு வைக்கப்பட்டு குறுங்கால வங்கி கடன் மூலம் செலுத்துவதற்கும் அந்த கடனுக்காக மேலதிக வட்டிச் செலவினத்தை மேற்கொள்ளவும் நேர்ந்திருந்தது. | உரத்தினை இறக்குமதி செய்யும் போது 5 சதவீதமான பற்றாக்குறை அல்லது மிகை பொருண்மையான விலகலொன்று ஏற்படும் நிகழ்தகவினை கருத்திற் கொண்டு உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திடப்படும். அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும் பற்றுச்சீட்டின் பெறுமதி மற்றும் அளவினை அடிப்டையாகக் கொண்டு நாணயக் கடிதம் திறக்கப்படும். மேலும் குறித்த கட்டளைகள் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டதன் பின்னர் நாணயக் கடிதத்தின் பெறுமதி மீண்டும் இயலுமை இல்லை என்பதை சுட்டிக் காண்பிப்பபதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கிடைக்கப் பெற்ற உரத்தின் அளவு மாத்திரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறு ரூபா 162,858,311 ஆன இலாபமாக காணப்பட்டதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 147,640,231 ஆகும். அதன் பிரகாரம் நிதிப் பெறுபேற்றில் ரூபா 15,218,080 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வருமான வரி செலவினம் குறைவடைந்தமை பிரதானமான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பகிர்ந்தளிப்பு கிரயத்தினை குறைக்கக் கூடிய பகிர்ந்தளிப்பு நடைமுறையொன்றினை உருவாக்குதல் மற்றும் களஞ்சிய தேவைப்பாட்டினை இனங்காணாது நாடு முழுவதிலும் பல்வேறு பிரதேசங்களில் 13 களஞ்சியங்களை பேணிச் செல்லுதல் மூலம் தவிர்க்க கூடிய நிர்வாக செயற்பாடுகள் மற்றும் போக்குவரத்து செலவினங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்த களஞ்சியங்கள் பயன்படுத்தப்படுவதுடன் உரிய காலத்திற்கு மற்றும் பற்றாக்குறையொன்று ஏற்படாதவாறு உரத்தினை பகிர்ந்தளிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு இந்த களஞ்சியங்கள் தேவைப்படுகின்றது. விசேடமாக பெரும் போகம் மற்றும் சிறு போகங்கள் ஆகியவற்றின் ஆரம்பத்துடன் நிலவும் வரையறுக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஏற்படும் பாரிய கேள்வியினை பூர்த்தி செய்வதற்குரிய போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்ளும் போது ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் நோக்கில் இந்த பிராந்திய களஞ்சியங்கள் பயன்படுகின்றன என்பது எமது எண்ணமாகும். அவ்வாறே எமது கம்பனிக்கு உரத்தினை பகிர்ந்தளிக்கும் பணி கையளிக்கப்பட்டுள்ள கமநல மத்திய சேவை மத்திய நிலையங்களை அண்மியதாக இந்த களஞ்சியங்கள் அனைத்தும் அமைந்துள்ளமையை விருப்பத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | செயற்திறனான மற்றும் ஆக்க பூர்வமான பகிர்ந்தளிப்பு நடைமுறை யொன்றினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கணக்காண்டினுள் இறக்குமதி செய்யப்பட்ட 06 நாணயக் கடிதங்களுக்குரிய TSP 3,575 மெற்றிக் தொன் (ஆய்வுகூட அறிக்கைகள் தோல்வியடைந்தமையால்) விவசாயிகளுக்கு | இந்த உர இருப்பு பெரும்போகத்தின் போது பகிர்ந்தளிக்கும் நோக்கத்துடன் உரத்தின் இருப்பினை அகற்றியதும் உடனடியாக விற்பனை அனுமதிப் பத்திரத்தினை | தேசிய உர செயலகத்தின் அங்கீகாரமின்றி உரம் விவசாயி களிடை யே பகிர்ந்தளிக்க கூடாது. |

விநியோகிப்பதற்கு தேசிய உர செயலகத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. எவ்வாறான போதிலும் இரசாயன ஆய்வு கூடங்களின் அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் அங்கீகாரமின்றி கம்பனியினால் மேற்படி உர இருப்பு விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. கொழும்பு கொமர்சியல் உர கம்பனியினால் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மேற்படி தரமற்ற உரத்தின் இருப்பிற்காக உர மானியத் தொகையினை செலுத்துவதற்கு தேசிய உரங்கள் செயலகம் பரிந்துரை செய்திராத போதிலும் உரத்திற்கு செலுத்த வேண்டிய நாளில் குறுங்கால வங்கி கடன் ஒன்றின் மூலம் கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டு பின்னர் பொதுத்திறைசேரியின் பொறுப்புடன் நீண்டகால கடன் தொகைக்கு மாற்றப்பட்டு உரிய அங்கீகாரமின்றி மானியங்களை பெற்றுக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது.

பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டது. எனினும் விற்பனை அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்வதில் தொடர்ச்சியான தாமதம் நிலவியமையால் குறித்த உர இருப்பினை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டது. அதன் காரணமாக நாட்டில் பாரியளவிலான உர பற்றாக்குறையொன்று உருவாகியது. இதன் காரணமாக விவசாயிகள் போராட்டங்களை ஈடுபடுவதை தவிர்ப்பதற்கும் அதன் காரணமாக அரசாங்கம் பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுப்பதை தவிர்க்கும் நோக்கிலும் குறித்த உர இருப்பினை ஏற்றும் போது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப் பட்ட இராசாய கூடத்தினால் வெளியிடப்பட்ட தரச் சான்றிதழ் மற்றும் அந்த தரச்சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு இந்த உர இருப்பு கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வருவதற்கு தேசிய உர செயலகத்தினால் வழங்கப்பட்ட முன் அனுமதியினை அடிப்படையாகக் கொண்டு தேசிய உர செயலகத்துடன் கலந்துரையாடி இந்த உர இருப்பினை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமையை தெரிவித்துக் கொள்கின்றேன்.

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மானிய உர இருப்பானது உரிய முகாமைத்துவதுடன் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கம்பனியினுள் சேதத்திற்குள்ளாகிய சுமார் 369 மெற்றிக் தொன் உரம் மீளாய்வாண்டினுள் இலவசமாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த காரணத்தால் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 22,140,000 ஆகும். | மீளாய்வாண்டினுள் சேதத்திற்குள்ளாகிய 369 மெற்றிக்தொன் உரத்தினை இலவசமாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு இலவசமாக பகிர்ந்தளிக்கும் பணிகள் அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த துடன் அதற்காக 2019.05.21 ஆந் திகதிய அமைச்சரவை செயலாளரின் அறிவுரைகள் மற்றும் 2019.05.30 இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அவ்வாறே இந்த உர இருப்பானது சேதமாக்கப்பட்டமையால் சேர்ந்த உரம் அல்ல என்பதுடன் இதன் போது நிறுவனத்திற்கு அல்லது அரசாங்கத்திற்கு எந்தவித நட்டமும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக் காண்பிக்கின்றேன்.<br><br>மேலும் இவ்வாறான உர இருப்பினை நிறுவனத்தினுள் சேர்ந்தமைக்கு பின்வரும் விடயங்கள் காரணமாக அமைந்திருந்தன.<br><br>• இறக்குமதி செய்யப்பட்ட இருப்பு சேதத்திற்கு உள்ளாகியிருந்தமை<br><br>கப்பல் ஏற்றப்பட்ட துறைமுகத்திலிருந்து கொழும்புத் துறைமுகம் வரையில் கப்பலில் கொண்டுவரும் போது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் (இயந்திர, காலநிலை போன்றன) உரம் ஈரலிப்பானமை, அதிகளவில் கட்டியானமை, உரம் நிறம் இழந்தமை | அரச உர மானிய இருப்பு உரிய முகாமைத்துவத் துடன் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |

போன்ற காரணங்களின் அடிப்படையில் இருப்பு சேதத்திற்கு உள்ளானமை, அதன் போது ஏற்படும் நிதி ரீதியான நட்டம் வழங்குனரிடமிருந்து அறவிடப்படுவதுடன் சேதமாகியுள்ள இருப்பு துடைத்தெடுத்த உரமாக (Sweeping) இருப்பு புத்தகங்களில் எடுக்கப்படும்.

- இறக்குமதி செய்யப்பட்ட இருப்பினை களஞ்சியத்தில் இறக்கும் போது அதாவது பொதியில் அடைக்கப்படாத உரம் (Bulk) கப்பலிலிருந்து பொதியலடைக்கப்படும் இயந்திரங்களுக்கு பொதியலடைக்கப் பட்டுள்ள உரத்தினை லொறிகளில் ஏற்றும் போது கப்பலின் தட்டின் அடிப்படையில் எறியப்படும் உரம் சேகரிக்கப்பட்டு அடையாளமிடப்படாத பொதிகளில் நிரப்பப்பட்டு களஞ்சியங்களுக்கு விநியோகிக்கப்படுவ துடன் அவையும் துடைக்கும் உரமாக இருப்பில் சேர்க்கப்படும்.

- துறைமுகத்திலிருந்து மத்திய களஞ்சிய சாலைக்கு லொறி மூலம் உரத்தினை கொண்டு சென்று வெளியேற்றப்படும் லொறிகளில் இறைக்கப்பட்டுள்ள உரத்தினை சேர்த்து அவற்றை பொதியலடைத்து நிறையிட்டதன் பின்னர் ப்ளாங் உரமாக இருப்பில் சேர்க்கப்படும்.

- மத்திய களஞ்சியங்களின் மற்றும் பிராந்திய களஞ்சியங்களின் உர பொதிகளை இறக்கும் போது மற்றும் ஏற்றும் போது கொக்கிகள் பயன்படுத்தப்படுகின்ற

மையால் கீழே உதிரும் உரத்தினை மீள பயன்படுத்த முடியாத நிலைமைக்கு உள்ளாகும் உரத்தின் அளவானது ப்ளாங் உரமாக இருப்பில்லே சேர்க்கப்படும். இதன் போது இருப்பு நட்டமொன்று ஏற்பட்டால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொதியொன்றில் இருக்க வேண்டிய தேறிய நிறையினை விட அதிக நிறையுடைய உரத்தின் அளவு பொதிகளில் காணப்படுகின்றமை ஆகும்.

**3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| ஹம்பாந்தோட்டை குத்தகை காணியில் களஞ்சியமொன்றினை நிர்மாணிப்பதற்கான மதியுரைக் கட்டிடங்கள் உள்ளடங்கலாக ஆரம்ப செலவினமாக கடந்த வருடங்களில் ரூபா 3,534,711 மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 198,190 ஆக ரூபா 3,732,901 கூட்டுப்பெறுமதி மூலதனமாக்கப்பட்ட நடைமுறை வேலையாக (Capital Work in Progress) கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த காணியில் களஞ்சியமொன்று நிர்மாணிக்கப்பட்டிராத காரணத்தினால் மேற்படி செலவினம் விளைவற்ற செலவினமாகியிருந்தது. | அம்பாந்தோட்டை துறைமுகத்தினை பயன்படுத்தி இரசாயன உரம் கொண்டு வரும் திட்டத்தின் பிரகாரம் இந்த காணியில் களஞ்சியத் தொகுதியொன்றினை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் அம்பாந்தோட்டையிலிருந்து உரத்தினை இறக்குமதி செய்யும் போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை தீர்க்கும் வரையிலும் தற்காலிகமாக இந்த செயற்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அரசின் கொள்கைத் தீர்மானங்களின் பிரகாரம் தற்போது திட்டமிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் அந்த தீர்மானங்களுக்கு பொருந்தும் வகையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதுடன் இதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள கிரயத்தினை இந்த | செயற்திட்ட மொன்றினை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள கற்கை யொன்றினை மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயற்திட்டத்திற்கு உரித்தாக்கும் எண்ணம் காணப்படுகின்றமையை தெரிவித்துக் கொள்கின்றேன். | |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்படும் விற்பனை முகாமைத்துவ முகாமையாளர் பதவிக்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது 2016 ஏப்ரல் 04 ஆந் திகதி முதல் (மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை) அந்த பதவியில் பதிற் கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | 2016 ஆம் ஆண்டு முதல் விற்பனை முகாமையாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் அந்த பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தரின் சேவை இடைநிறுத்தப்பட்டு உள்ளக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் அந்த பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக் கொள்ள முடியாதிருந்தது. இந்த பிரச்சினையை தீர்த்த பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் புதிய விற்பனை முகாமையாளர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கு திறந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பதவிக்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்த உத்தியோகத்தர் ஒருவர் முன்வராத காரணத்தால் மேற்படி வெற்றிடத்தினை நிரப்ப முடியாதிருந்தது. எனினும் மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு புதிய முகாமையாளர் ஒருவரை இணைத்துக் கொள்ள உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |